[1972 ஆகஸ்டு 9

கோடம்பாக்கம் புதூருக்கு வசதிகள்

* 21. வினு—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கோடம்பாக்கம் புதூர் (Part II) பிரிவில் (கலைஞர் கருணாநிதி நகர்) சென்னை வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கப்பட்ட மனைகளில் விடுகட்டி குடியிருப்போர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேலாகியும், குடிதண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகள் செய்து தராமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) சென்னை கோடம்பாக்கம் புதூர் (Part II) பிரிவில் (கலைஞர் கருணாநிதி நகர்) வசிக்கும் சுமார் 300 குடும்பங்களுக்கு தற்போது குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் அதிகப்படியான நில நீர் ஊற்றுக்கள் இல்லையாதலால் விருகம் பாக்கம் போரூர் ஏரிக்கரைப் பகுதியில் உள்ள நில-நீர் ஊற்றுக்களிலிருந்து தூய்மையான குடிநீர் இந்நகரில் வசிப்பவர்கள் எல்லோருக்கும் கூடிய விரைவில் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மின் வசதி அளிப்பதற்கான ஏற்பாடுகளை மின்சார வாரியம் செய்து வருகின்றது. இன்னும் மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் எல்லா வீடுகளுக்கும் மின்வசதி கிடைக்கக்கூடும்.

நகராட்சிகளும், பேருந்துப் போக்குவரத்தும்

* 22 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த நகராட்சிகள் டவுன் பஸ் விட வேண்டுவதற்கான அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பித்துள்ளன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விண்ணப்பம் ஏதும் முடிவுறு நிலையில் இல்லை. நகரப் பேருந்துப் பணிகளை நடத்த நகராட்சிகளுக்கு அனுமதி வழங்குவதில்லையென்பது அரசின் கொள்கையாகும்.

சென்னை—நாகப்பட்டினம் வழித்தடத்தில் இரவு நேரப் பேருந்து

* 23. வினு—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

சென்னை—நாகப்பட்டினம் பேருந்து தடத்தில் இரவு நேர துரித வண்டி (Express) விடும் நோக்கம் அரசுக்கு உள்ளதா?

1972 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 7—8—1971-லிருந்து 538-ஆம் எண் பேருந்து வழித் தடத்தில் சென்னையிலிருந்து செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விக்கிரவாண்டி, நெய்வேலி, சிதம்பரம், மாயூரம், திருவாரூர் வழியாக நாகப்பட்டினம் வரை இரண்டு பேருந்துகள் இரவு நேரப் பேருந்துகளாக விடப்படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இரவு நேரப் பேருந்துகளில், பிரயாணிகளின் வசதிகளை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் 'ஸ்ப்ரிங்' பொருத்தப்பட்ட இருக்கைகள் அமைக்கப்பட இருப்பதாகச் செய்திகள் வந்தன. இது வரையில் இந்த வசதிகளுடன் கூடிய பேருந்துகள் விடப்பட்டனவா? இல்லையெனில் இன்னும் எவ்வளவு காலத்தில் இப்படிப்பட்ட பேருந்துகளை விட இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பயணிகளுக்கு வசதிபொருந்திய இருக்கைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இடையிலே 'லேலண்டு' தொழிற்சாலை நீண்ட நாட்கள் மூடப்பட்டிருந்த காரணத்தினால் போதுமான 'சேஸிஸ்' நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, இதில் சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. கூடியவிரைவில் இவைகள் நிறைவேற்றப் படும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட இரவு நேர நீண்டதூரப் பேருந்துகளிலே பயணிகளுக்குத் தூங்கும் வசதிகொண்ட படுக்கை-இருக்கைகள் ஏற்படுத்தித் தரும் திட்டத்தை அரசு ஆலோசிக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் அரசின் பரிசிலனையில் இப்போது இல்லை.

அரசுப் பேருந்து பணிமனைகள்.

* 24. **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத்திற்கு ஒரு ஓர்க்ஷாப் துவங்கி அரசு பஸ்களைப் பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : இப்படி அமைக்கப்பட்டுள்ள மாவட்டப் பணிமனைகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு போக்குவரத்துக்குப் பயனுள்ளவையாக இருந்தாலும், இன்னும் பல பணிமனைகளில் போதுமான எண்ணிக்கையில்